ஞாலகுருவின் படைப்புக்கள்

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,127 ஆவணி மாதம்

# இ.மு.க.வின்
# அருளாட்சிக்கு அழைப்பு



இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, இந்துவேத
இந்துமதத் தலைமை ஆச்சாரிய குருபீடம்
அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்கள்

இந்து இலக்கியக் கழக வெளியீடு

43,73,127ஆம் ஆண்டின் ஆவணி மாத வெளியீடு.

<u>*தலைப்பு*</u>:- **“இ.மு.க.வின் அருளாட்சிக்கு அழைப்பு”**

# <u>உள்ளுறை</u>

1. **“அருளாட்சிக்கு அழைப்பு”** - குருதேவர் அவர்கள் இந்துவேத முன்னேற்றக் கழகத்தின் சொற்பொழிவாளர்களுக்கு வழங்கிய கருத்துக்கள்.
2. **“இ.மு.க.வின் செயல்நிலைகள்”** - இந்துவேத முன்னேற்றக் கழகத்தின் செயல்நிலைகளாகக் குருதேவர் வழங்கிய செயல்திட்டங்கள்.
3. **“குருதேவர் வழங்கிய செயல்திட்டம்”** - சுடலைப்பூசையினை செயலாக்கும் விதத்தை குருதேவர் அவர்கள் வாய்மொழியாக சித்தரடியான்கள் இருவருக்கு நேரில் வழங்கிய கருத்துரை.
4. **“தெய்வீக மருத்துவ மையம்”** - அருட்பணி விரிவாக்கத் திட்ட மாதண்டநாயகத்திற்கு குருதேவர் அவர்கள் வழங்கிய செயல்திட்ட அஞ்சல்.
5. **“குருதேவரின் சிந்தனைத் துளிகளில் சில”** - 1960களில் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறையில் ஆராய்ச்சியாளராக இருந்தபோது குருதேவர் எழுதிய சிந்தனைத் துளிகளில் சில.

# அருளாட்சிக்கு அழைப்பு

## சொற்பொழிவாளர்களுக்கு

27-8-1995.

(1) பெரியோர்களே! தாய்மார்களே! சகோதர சகோதரிகளே! உங்கள் அனைவர்க்கும் '**அருளாட்சிக்கு அழைப்பு**' விடுக்கும் வண்ணமாகவே இப்பொதுக்கூட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது. இச்செய்தியை மிக்க மகிழ்ச்சியோடும், பெருமையோடும், பூரிப்போடும் உங்களுக்குத் தெரிவிக்கின்றேன்.

(2) பொதுமக்களே! உங்கள் ஒவ்வொருவரின் சீவன் (=) என்பது ஆவி + ஆன்மா + ஆருயிர் என்ற மூன்றும் இணைந்து உருவானது என்ற பேருண்மையை விளக்கும் கொடிதான் எங்களது மெய்ஞ்ஞானக் கொடி. ஆனால், இக்கொடியை 'சீவலிங்கக் கொடியான மெய்ஞ்ஞானக் கொடி' என்றுதான் மனுநீதி நூல்களும், இந்துவேதங்கள் நான்கும், இந்து 'வேத சுலோகங்கள்' எனப்படும் சூலகங்கள் நான்கு இலட்சத்து நாற்பத்து இரண்டாயிரத்து முன்னூற்று அறுபத்தெட்டும், இந்து வேத நூல்கள் முன்னூற்றுத் தொண்ணூற்று ஆறும், இந்து மத நூல்கள் முப்பத்தாறும் குறிக்கின்றன. இந்த சீவலிங்கக் கொடியான 'மெய்ஞ்ஞானக் கொடி' உலகம் முழுதும் பறந்திடும்.

அப்படி இந்த மெய்ஞ்ஞானக் கொடி எந்தெந்த நாடுகளில் முதலில் பறக்க விடப்படுகிறதோ! அங்கெல்லாம் நன்மைகள் மிகுந்து தீமைகள் அழிந்தொழியும்! நீதி தழைக்கும்! நேர்மை பிழைக்கும்! உண்மை வெல்லும்! நல்லவர்கள் எதிலும் வெல்வார்கள். மக்களிடையே உண்மையான பற்று, பாசம், அன்பு, ஒற்றுமை, மனித நேயம், அடக்கம், சமாதானம், சமத்துவம், சகோதரத் தத்துவம், அமைதி,

கனிவு, இனிமை, பஞ்சமின்மை, மகிழ்ச்சி, நோய்நொடியில்லா நல்வாழ்வு ... முதலியவை உண்டாகிடும்! உண்டாகிடும்!! உண்டாகிடும்!!! .... என்று அழுத்தம் திருத்தமாக ஆணித்தரமாகக் கூறுகின்றன.

(3) எனவேதான், நாங்கள், கிராமம் கிராமமாகச் சென்று; "கிராமத்து மக்களே! உங்கள் கிராமம் செழிப்படைய, நல்வாழ்வு பெற்றிட; உங்களுக்குள் ஒற்றுமையும், சமாதானமும், மகிழ்ச்சியும், நோய்நொடியில்லா நல்வாழ்வும் பெற்றிட; பயிர்களும் உயிர்களும் பிழைத்துத் தழைத்திடவும்; ஊர்ப் பொதுவிடங்களிலும், கோயில்களிலும் மெய்ஞ்ஞானக் கொடியை ஏற்றி; திரிசூலம் எனப்படும் மூவிலைச் சூலத்தை நட்டு, அதையொற்றி விளக்கு மாடம் கட்டி, மாலையில் விளக்கேற்றி வழிபாடு செய்யுங்கள்" - என்ற இந்து வேத அறிவிப்பை விளக்கவே வந்துள்ளோம் நாங்கள்.-

(4) பொதுமக்களே! மாற்று வேத மந்திரக்காரர்களும், வேற்று மத சூன்யக்காரர்களும் நம் மக்களுக்குள் ஊடுருவி இடைவிடாது மருந்து, கண்ணேறு, காற்று, கறுப்பு, பேய், பிசாசு, பில்லி, ஏவல், சூன்யம் .... முதலியவைகளைப் பயன்படுத்திக் குடும்பங்களைப் பிரிப்பது, ஊருக்குள் சண்டை சச்சரவுகளையும், கலகங்களையும் உண்டாக்குவது, தனிப்பட்ட குடும்பங்களை வறுமைக்கும், நோய்க்கும் உள்ளாக்குவது; தனிமனிதர்களுக்கு வயிற்றில் மருந்து வைத்தும், தலையில் மை பூசியும் தனிமனிதனுடைய நல்ல பண்புகளையும், அடக்கமான நேர்மையான, குடும்பப் பற்றுப் பாசமான, அன்பான, இனிமையான, கனிவான பழக்கவழக்கங்களையும் மாற்றி முரடர்களாக, அயோக்கியர்களாக மாற்றுகிறார்கள்.

இதுமட்டுமல்ல, இந்துக்களாகிய நாம்தான் பிணத்தை எரித்துச் சாம்பலை புனித ஆறுகளிலும், கடல் துறைகளிலும் கரைக்கின்றோம். **ஆனால்** வேற்று மதத்தாரும், மாற்று வேதத்தாரும் நமது இந்துக்களின் சுடுகாடுகளில்தான் தங்களுடைய பூசைகளைச் செய்து; சுடலைச்

சாம்பலை எடுத்துச் சென்று குளிசம், தாயத்து, முடிகயிறு, சக்கரம் முதலிய அனைத்தையும் செய்கிறார்கள்.

(5) அதுமட்டுமல்ல நமது பிணங்கள் எரியும் போது; அவற்றிலிருந்து மை தயாரிக்கும் 'ஊன் நீர்'; அதாவது 'உடல் வெந்து வடியும் கொழுப்பு எண்ணை', உடல் எரிந்து மீந்த எலும்பு; ..... முதலியவைகளை எடுத்துச் சென்று பூதம், ஆவி, அருவம், காற்று, கறுப்பு, பேய், பிசாசு, பில்லி, சூன்யம், ஏவல், செய்வினை, மருந்து, கண்ணேறு, குட்டிச் சாத்தான், மாடன், .... முதலியவைகளைச் செய்து ஏவி விட்டு இந்துக்களின் தனிமனித வாழ்வையும், குடும்ப வாழ்வையும், ஒரு தெருவினர் ஒற்றுமையாக வாழ்வதைப் பாதித்தும்; ஒரு கிராமத்தார் நல்ல ஒற்றுமையோடு இருப்பதைக் கெடுத்தும்; பக்கத்துக் கிராமங்களோடு சமாதானமாக எந்த கிராமமும் வாழ முடியாமல் செய்தும் வருகிறார்கள்.

இப்படி அன்னிய மதத்தவர்களால் அடுக்கடுக்காக வரக்கூடிய தொல்லைகளையும், துன்பங்களையும், கேடுகளையும் உடனடியாகத் தடுத்திட வேண்டும். நம் இந்துக்கள் ஒவ்வொருவரையும், ஒவ்வொரு குடும்பத்தையும், ஒவ்வொரு தெருவையும், ஒவ்வொரு கிராமத்தையும், ஒவ்வோர் ஊரையும் அன்னிய மதத்து, வேதத்து மந்திரவாதிகளிடம் இருந்து பாதுகாத்திடப் புறப்பட்டிருக்கிறது 'இ.மு.க.', 'I.M.K.', 'இந்து வேத முன்னேற்ற கழகம்'.

(6) பொதுமக்களே! பெரியோர்களே! தாய்மார்களே! இளைஞர்களே! சிறுவர்களே! .... இன்றைக்கு; இங்கு கூடியுள்ள நாங்கள் அனைவரும் இதுகாறும் கூறிட்ட பேருண்மைகளை நன்கு தெரிந்து, அறிந்து, ஆராய்ந்து, புரிந்து, தெளிந்து, உணர்ந்து, நம்பி, ஒப்புக் கொண்டு, செயலாக்க வேண்டும். அதாவது இன்றுவரை இந்துமதத்தின் பெயரால் தோன்றிய சபைகளோ, சங்கங்களோ, அரசியல் கட்சிகளோ, ... இந்துக்களைப் பாதுகாப்பதற்காக எள்முனையளவு கூட எந்தவித

முயற்சிகளையும் செய்யவில்லை. அவர்கள் இதுவரை செய்ததெல்லாம் மாற்று மதத்தவர்களுக்கும், இந்துக்களுக்கும் இடையே ஆங்காங்கே இந்தியா முழுதும் சண்டை, சச்சரவு, சிறிய பெரிய கலகங்கள், கச்சராக்கள், .... முதலியவைகளே உருவாக்குவதுதான்.

(7) இதைப் போலவே "தமிழ் வாழ்க" என்று வாய் கிழியக் கத்தும் அரசியல் கட்சிகள் அனைத்துமே! தமிழ்ப் பண்பாட்டைக் கல்வி நிலையங்களில் கொலை செய்யக் கூடிய எந்த மதத்தையுமே கண்டிப்பதில்லை! கண்டிப்பதில்லை!! கண்டிப்பதே இல்லை! கண்டிப்பதென்பது இல்லவே இல்லை. ஏன்? ஏன்? ஏன்?

(8) "தமிழ் வாழ்க! தமிழ் வெல்க!"
"எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்!
எல்லாமே தமிழ் மயம்தான்"

என்று வீரமுழக்கமிட்ட, வீரமுழக்கமிட்டுக் கொண்டிருக்கின்ற அரசியல் கட்சிகள் அனைத்துமே ஆங்கில மொழி வழிக் கல்விக்கே ஆக்கமும் ஊக்கமும் தருகிறார்கள். அதுமட்டுமல்ல, ஆங்கிலேயரின் பண்பாட்டுப் போக்கையும், நோக்கையுமே பெரிதும் உடையவர்களாக இருக்கிறார்கள். இவர்கள், 'தமிழ் வாழ்க' என்று கூறுவது ஏமாற்று வித்தையே.

(9) தமிழ் நாட்டில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளுமே நாத்திகக் கொள்கையை உடையவைதான். ஆனால், இந்துவேதம் அண்டபேரண்ட அருளாட்சி மொழியான தமிழ்மொழியை ஆதிசிவனார் இம்மண்ணுலகுக்கு அருளியதாகக் கூறுகிறது. அதுமட்டுமல்ல; தமிழ்மொழி கடவுளர் மொழி! தமிழ்மொழி தெய்வீக மொழி! தமிழ்மொழி தேவர் தேவதை மொழி! தமிழ்மொழி ஆண்டவர் மொழி! தமிழ்மொழி வேத மொழி! அருளுலக மொழி! இப்படி தமிழ்மொழி முழுக்க முழுக்க ஆத்திக மொழியாக இருக்கும்பொழுது; நாத்திகர்களான அரசியல்வாதிகள் எப்படித் 'தமிழ் வாழ்க' என்று கூறலாம்! கூற முடியும்! தெய்வீகமான சங்கப் புலவர்களும், அறுபத்து மூன்று நாயன்மார்களும், ஆழ்வார்களும்,

பட்டினத்தாரும், தாயுமானவரும், அருணகிரியாரும், இராமலிங்க அடிகளாரும், கலைமகள் அருள் பெற்று கம்பரும், வில்லிபுத்தூராரும் பாடிய இலக்கியங்கள்தானே நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது பங்கு தமிழ் இலக்கியங்களாக இருக்கின்றன. இப்படிக் கடவுளருளால் பிறந்த இலக்கியங்கள் மிகுந்த தமிழை; நாத்திகர்கள் “வாழ்க!” என்று கூறுவதும், “வளர்ப்போம்! காப்போம்!” என்பதும், “தமிழின் உரிமைக்காகப் போராடுவோம்” என்று கூறுவதும் பொருளற்றதுதானே! ஏமாற்றுத்தானே!

இப்படி, அரசியல்வாதிகள் இனியும் தமிழின் பெயரால் ஏமாற்றுக்கள் செய்வதென்பது நிகழக் கூடாது என்பதற்காகத்தான், இம்மண்ணுலகுக்கு தமிழை அருளிய ஆதிசிவனாரின் வாரிசாக; ஆதிசிவனாரே தோற்றுவித்த பதினெண்சித்தர் மடத்தின் மடாதிபதியாக, பீடாதிபதியாக, இந்துவேத நாயகமாக, இந்துமதத் தந்தையாக, கருகுல ஆதீனமாக, கருமூலப் பண்டாரமாக, ஆதி அனாதி கடந்த தம்பிரான் அடிகளாராக இன்று வாழும் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் மடாதிபதியாக, பீடாதிபதியாக நாளோலக்கத்திலும், திருவோலக்கத்திலும் அமர்ந்துள்ள குருதேவர், குவலய குருபீடம், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள்; நான்கு யுகமாக இருந்து வரும் இந்துவேத முன்னேற்ற கழகம் - இ.மு.க. I.M.K. எனும் சமய சமுதாய முன்னேற்றக் கழகத்தை இப்பொழுது அரசியல் கழகமாக அறிவித்திருக்கிறார். இது அருளுலக அறிவிப்பு. இதன் மூலம் இந்துமதப் பாதுகாப்புக்குரிய அறிவிப்புச் செய்துள்ளார். இந்த அறிவிப்பை உண்மையான இந்துக்கள் அனைவரும் நன்கு புரிந்து ஏற்றுக் கொள்ள வேண்டும்.

நாடு முழுதும் உள்ள எல்லாத் தெருக்களிலும், தெருமுனைகளிலும், பொது இடங்களிலும், கோயில்களிலும், கடைவீதிகளிலும், உண்மையான கடவுள் பத்தி உள்ளவர்களின் இல்லங்களிலும் சீவலிங்கக் கொடியான ‘மெய்ஞ்ஞானக் கொடியை’ நெடிய உயரமான கம்பங்களில் பறக்க

விட வேண்டும். அக்கொடிக் கம்பத்துக்கு அருகில் திரிசூலம் ஊன்றி; விளக்கு மாடம் அமைத்து, விளக்கேற்றி வழிபாடு செய்ய வேண்டும். அப்பொழுதுதான் நாத்திகர்களின் ஏமாற்றுக்களில் இருந்தும், இந்துமதத்தின் பெயரால் மக்களை ஏமாற்றி நன்கொடைகள் பெற்றும்; அறுவசியமான மதச் சண்டைச் சச்சரவுகளையும், கலகங்களையும், கச்சராக்களையும் உருவாக்கும் போலிக் கட்சிகளை, அன்னிய மதக் கங்காணிகளை, வேற்று மதத்தாரின் கைக்கூலிகளை தமிழகத்தில் முதல் கட்டமாக ஓழிக்க முடியும். இந்தக் கட்சிகள் போலியானவை; இந்துக்களை ஏமாற்றும் துரோகப் போக்குடையவை; ஆதிசிவனுரின் இந்துவேதத்துக்கும், இந்து மதத்துக்கும் விரோதமானவை. ஆனுல், பொதுமக்களே! இந்துமதத்தின் பெயரால் உள்ள போலிக் கட்சிகள், துரோகக் கட்சிகள், விரோதக் கட்சிகள் .... முதலியவைகளை தமிழர்கள் அடையாளம் தெரிந்து கொள்ள வேண்டும்.

இவற்றுக்காகத்தான், ‘அந்தணர் அண்ணல்’, ‘இந்துவேத நாயகம்’, ‘இந்துமதத் தந்தை’, ‘ஆதிசிவனுரின் வாரிசு’, ஞானுச்சாரியார் அவர்கள்; நான்கு யுகமாகச் சமய சமுதாயக் கழகமாக இருந்திட்ட ‘இந்துவேத முன்னேற்றக் கழகத்தை’ ஓர் ஒப்புயர்வற்ற அரசியல் கழகமாக அறிவித்துள்ளார்! அறிவித்துள்ளார்!! அறிவித்துள்ளார்!!! இந்த அறிவிப்பைத் தமிழர்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்; இ.மு.க.வை முழுமையாக ஆதரிக்க வேண்டும்.

(10) தமிழர்கள் அனைவரும் ஒரே மனதாக முழுமூச்சுடன் தீவிரமாக ‘இ.மு.க.’வை ஆதரித்தால்தான்; இதுவரை தமிழின் பெயராலும், இந்துமதத்தின் பெயராலும் எல்லோரையும் ஏமாற்றி வந்திட்ட அரசியல் கட்சிகளையும், சமய சமுதாயக் கட்சிகளையும், கழகங்களையும், இயக்கங்களையும் அழித்தொழிக்க முடியும். அப்பொழுதுதான், தமிழரின் இந்து வேதத்தையும், இந்துவேத மதமான இந்துமதத்தையும் பாதுகாக்க முடியும்! முடியும்!! முடியும்!!!

(11) அதாவது, தமிழர்களின் இந்துவேத, இந்துமத உரிமைகளையும், பெருமைகளையும் முறையாகவும் முழுமையாகவும் பாதுகாத்திட முடியும்! அப்பொழுதுதான் இமயத்தின் விளிம்பு முதல் கன்னியாகுமரிக் கடலடி மணல் பரப்பு வரை உள்ள நாடுதான் தமிழ்நாடு; தமிழரின் இந்துமத நாடு, இந்துவேத நாடு என்ற பேருண்மை விளங்கிடும்; செயலுக்கு வந்திடும். இந்தியாவின் ஒற்றுமையும் வலிமையும் இந்துமதத்தால்தான் காப்பாற்றப்படும்.

(12) இந்துமதம் தமிழ்மொழியில்தான் எல்லாவகையான மனுநீதிகளையும், இந்துவேதம் நான்கையும், இந்துவேத நூல்கள் 396ஐயும், இந்துமத நூல்கள் 36ஐயும், இந்துவேத சூலகங்களான சுலோகங்கள் 4,42,368ஐயும் பெற்றிருக்கின்றது. இதுமட்டுமல்ல, இந்துமதத்துக்கென உரிய 108 வகைப்பட்ட திருப்பதிகளையும், 243 வகைப்பட்ட சத்தி பீடங்களையும், 1008 வகைப்பட்ட சீவாலயங்களையும் இயக்குகின்ற சக்கரங்கள் அனைத்தும் தமிழ்மொழியிலுள்ள 323 எழுத்துக்களால்தான் உருவாக்கப்பட்டவை. இவற்றில் 247 தமிழ் எழுத்துக்கள் மட்டுமே இன்றைக்கு உலகியலாக எல்லோருக்கும் தெரியும். மீதியுள்ள அருளாற்றல் மிக்க 75 எழுத்துக்களும்; பதினெண்சித்தர் பீடாதிபதிகள் மட்டும் எல்லாவற்றையும் கடவுளாக்கும் ஒரே ஒரு கடவுள் எழுத்தையும் அறிந்திருப்பதுதான்; தமிழ்மொழி மாறாத இளமை பெற்ற 'கன்னித் தமிழ்', 'அமுதத் தமிழ்', 'அருளூறு அமுதத் தெய்வீகச் செம்மொழியான முத்தமிழ்', 'அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழி', 'மனிதனைக் கடவுளாக்கும் மொழி', 'மனிதனுக்குப் பத்தி, சத்தி, சித்தி, முத்திகளைத் தரும் அருள்மொழி' .... என்று 1359 சொற்றொடர்களால் புகழப்படுகின்றது.

ஆனால், தமிழன் கூட இன்றைக்குத் தமிழை விரும்பாமல் ஆங்கிலத்தையும், பிற மொழிகளையும் விரும்புகிறான். இந்த விருப்பம்தான் தமிழனை அன்னியனாக! தமிழை எதிர்ப்பவனாக! தமிழை மறுப்பவனாக! தமிழை வெறுப்பவனாக! தமிழுக்குப் பதில்

பிற அன்னிய மொழிகளை விரும்புகிறவனாக! அன்னிய மொழியின் புகழ் பாடுபவனாக! அன்னிய மொழியே வேலை தேடித் தரும் மொழி; அன்னிய மொழியையும் அன்னிய மொழிக்குரிய பண்பாட்டையும், நாகரிகத்தையுமே சிறந்தது என்று கருதுகிறான். இன்னும் சொல்லப் போனால்; தாய்மொழியான தமிழ்மொழியில் பேசுவதும், எழுதுவதும் கூட அவமானத்தைத் தரக் கூடியது என்று தமிழனே கருதுகிறான். -- இப்படிப்பட்ட தமிழன் எப்படி மற்றொரு தமிழனை மதிப்பான்? மற்ற தமிழர்களோடு ஒற்றுமையாக வாழ்வான்.?

(13) இதனால்தான், தமிழர்களுக்கிடையே ஒற்றுமை உருவாக முடியவில்லை. அதாவது, 'எல்லாம் தமிழ்', 'எதிலும் தமிழ்', 'எல்லாமே தமிழ்' என்ற நிலையை உருவாக்கிட முடியவில்லை. இது புரியாமல், '<u>தமிழர்களை ஒற்றுமைப்படுத்த வேண்டும்</u>' என்று கூச்சல் போடுவது <u>ஏமாளித்தனம்!</u> அல்லது <u>ஏமாற்றுத் திறம்!</u>...... என்றுதான் கூற வேண்டும்.

(14) முதலில் '<u>தமிழன் ஏன் ஒற்றுமையாக இல்லை</u>' என்று வினாவெழுப்பிக் **<u>கருத்தரங்குகளும், பட்டிமன்றங்களும், சொற்பொழிவுப் போட்டிகளும் நிகழ்த்தப்பட்டிட வேண்டும்</u>**. ஆரம்பப் பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரை இந்த ஆய்வுகளை நிகழ்த்த வேண்டும். அதற்கு, எந்த ஒரு கட்சியும் தயாராக இல்லை, இல்லை, இல்லை, இல்லவே இல்லை. எனவேதான் '**<u>இ.மு.க.</u>**' பதினெண்சித்தர் மடத்துக்குள் இருந்த நிலை மாறி; இன்றைக்கு அரசியலுக்கு வந்திருக்கிறது. இதைத் தமிழர்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

(15) அதாவது, பொதுவாக மனிதன் எந்த ஒரு மொழியைத் தாய்மொழியாகக் கருதுகிறானோ! அவன், அந்த மொழிக்காரர்களுக்குரிய நடை உடை பாவனை, பண்பு, புறநாகரிகம், இலக்கியம், கலை .... முதலியவைகளைத்தான் விரும்புகிறான். இன்றைக்கு அரசியல்வாதி முதல் அப்பாவி ஏழைக் கிராமத்தான் வரை ஆங்கில மொழியைத்தான்

விரும்புகிறுன், மதிக்கிறுன். அதன் விளேவு என்ன?; ஒவ்வொரு தமிழனும் ஆங்கிலேயனேப் போல் உடையுடுத்த, ஆங்கிலேய மதமான கிறித்தவ மதத்தவர்கள் போல நெற்றியில் எதுவும் பூசாமல், வேட்டி சட்டை போடாமல், கோயில் வழிபாடுகள் செய்யாமல்; நமது சாத்தர, சாத்திர, சாத்திற, சம்பிறதாயங்கள், சடங்குகள், திருநாள்கள், திருவிழாக்கள், .... முதலியவைகளே நம்பாமல், விரும்பாமல், போற்றிப் பேணிக் கொண்டாடாமல் வாழுகிறுன்.

இன்னும் சொல்லப் போனுல், கணிசமான எண்ணிக்கைக்குரிய தமிழர்கள் ஆங்கிலேய முறையிலேயே உணவு உண்ணுவதையும், உடையுடுத்துவதையுமே தங்களின் வாழ்க்கையின் பெரிய சாதனேயாக எண்ணிக் கொண்டுள்ளார்கள். இப்படித் தமிழன் ஆங்கிலேய அகப் பண்பாட்டுக்கும், புறநாகரிகத்துக்கும் அடிமையாகிக் கிடப்பதற்குக் காரணம் என்ன? என்ன? என்ன?

(16) தமிழர்களில் கணிசமானவர்கள் தங்களுடைய குழந்தைக்கு இரண்டு வயது நிறைவதற்கு முன்னரே ஆங்கில மொழிவழியாகக் கல்வி கற்றுத் தரும் பள்ளிகளுக்கு அனுப்பி விடுகிறுர்கள். அதனுல், அந்தப் பிஞ்சு நெஞ்சிலும், சிந்தையிலும், உணர்விலும், எண்ணத்திலும் ஆங்கில மொழியும், மொழிவழிப் பண்பாடும் நாகரிகமுமே ஏற்பட்டு படிப்படியாக வளர்ந்து வலிமைப்படுகின்றன. எனவேதான், ஆங்கில மொழிவழியாகக் கல்வி கற்பவர்கள் அனேவருக்குமே ஏறத்தாழ 1. தாய்ப்பாசம், 2. தந்தைப்பாசம், 3. உடன்பிறப்புக்களின் மேல் பாசம், 4. உற்றுர் உறவினர் மீது பற்றுப்பாசம், 5. தமிழினப் பாசம், 6. தமிழ்மொழிப் பற்றும், தமிழ்நாட்டுப் பாசமும், 7. குடும்பத்தார் மீது பிடிப்பும், ..... இல்லாதவர்களாகவே வளர்ந்திடுகிறுர்கள்.

இன்னும் சொல்லப் போனுல், பிறப்பினுல் தன்னுடைய தாய்நாட்டு மதமான இந்து மதத்தையே மறுக்கவும், வெறுக்கவும், எதிர்த்துக் கேலியும் கிண்டலும் செய்வதும், மதப் போலியாக காலியாக,

அன்னியமதக் கைக்கூலியாக, அன்னிய மதத்தைக் காக்கும் வேலியாக, இந்துமதத் துரோகியாக மாறிட நேரிடுகிறது. இவை மட்டுமல்ல, இந்த ஆங்கில வழிக் கல்வி கற்பவரெல்லாம் எந்தவித பற்றுப் பாசமும் இல்லாமல்; தன்னுடைய படிப்பையும், அறிவையும், உழைப்பையும் அதிகச் சம்பளம் கொடுக்கக் கூடிய எந்த நாட்டுக்கு வேண்டுமானாலும் விற்கத் தயாராக இருக்கிறார்கள்; அடிமைக் கூலியாக வேலை செய்யவே முயலுகிறார்கள். அதுவும் அன்னிய நாட்டுக் குடிமகன்களாகவே மாறிடுகின்றார்கள். புதிய புதிய உறவுகளை எல்லாம் வளர்த்துக் கொண்டு தாய்வீட்டையும், தாய்நாட்டையும் மறந்தவர்களாக, துறந்தவர்களாகவே மாறிடுகின்றார்கள்.

(17) ஆங்கிலக் கல்வி கற்பவர்களே இப்படி மாறுகிறார்கள் என்றால்; அன்னிய மதங்களுக்கு மாறியவர்கள் இதைவிட மிகமிக மோசமானவர்களாகவே மாறி விடுகின்றார்கள் என்பதை விளக்கத் தேவையில்லை. எனவேதான், முதலில் ஆங்கில வழிக் கல்வியை ஒழிக்க வேண்டும். அதன்பிறகு இந்துமதப் பாலகர்களுக்கும், சிறுவர்களுக்கும், இளைஞர்களுக்கும், பெரியோர்களுக்கும், .... இந்துவேத, இந்துமத வாழ்வியல்களையும், வரலாறுகளையும், செய்திகளையும், கருத்து வளங்களையும், அருட்பயன்களையும் விளக்கிட வேண்டும்.

(18) பெரியோர்களே! தாய்மார்களே! சகோதர சகோதரிகளே! .... உங்கள் அனைவர்க்கும் இ.மு.க. சொல்வதெல்லாம் நமது மதமான இந்து மதத்தையும்; இந்து வேதத்தையும் நம்மவர்கள் முறையாகவும், முழுமையாகவும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதுதான். எக்காரணத்தையும் முன்னிட்டு மாற்று மதத்தவர்களைக் குறை கூறவோ! அல்லது அவர்களோடு சண்டை போடவோ இ.மு.க. எக்கருத்தையும் கூறாது, எந்த முயற்சியையும் செய்யாது.

(19) பெரியோர்களே! இந்து வேதத்துக்கும் இந்து மதத்துக்கும் மூலவர்களாக, முதல்வர்களாக, காவலர்களாக, நாயகர்களாக,

வித்துக்களாக, சொத்துக்களாக, தலைவர்களாக, வாரிசுகளாக, அருளாளிகளாக, மருளாளிகளாக, .... வாழையடி வாழையென வருபவர்கள் தமிழர்கள்தான். ஏனெனில், இந்து வேதத்துக்கும், இந்து மதத்துக்கும் உரிய நூல்கள் அனைத்தும் தமிழ்மொழியில்தான் இருக்கின்றன. அதாவது, "தமிழரின் உள்ளங்களும் இல்லங்களும்தான் இந்துவேத இந்துமத நாற்றுப் பண்ணைகள், விதைப் பண்ணைகள், நாற்றங்கால்கள்".

(20) இவற்றையெல்லாம் விளக்கியுரைத்துத் தமிழர்களைத் தட்டியெழுப்பி; ஒன்றுதிரட்டி; ஒற்றுமைப்படுத்திடத்தான் பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் தமது திருமடத்தை விட்டு வெளிக் கிளம்பி ஞான உலா வருகிறார். அவர் உருவாக்கியுள்ள ஆயிரமாயிரம் சித்தர்கள் நாடு முழுதும் அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியாரின் **<u>இ.மு.க.</u>** எனும் இந்துவேத முன்னேற்றக் கழகத்தை ஓர் அரசியல் கழகமாக்கிச் செயல்பட்டு வருகிறார்கள். இதைப் புரிந்து நீங்கள் எல்லாம் <u>இ.மு.க.வின் வேட்பாளர்களுக்கு</u>; அல்லது <u>இ.மு.க.வின் ஆதரவு பெற்ற வேட்பாளர்களுக்கே உங்களுடைய பொன்னான வாக்கை வழங்க வேண்டும்</u>.

"இ.மு.க.வின் வெற்றியே இந்துமதத்தின் வெற்றி"

"இ.மு.க.வின் வெற்றியே இந்துக்களின் வெற்றி"

"இ.மு.க.வின் வெற்றியே தமிழின் வெற்றி! தமிழ்ப் பண்பாட்டின் வெற்றி!

.......... .......... [*நகல் முழுமையாகக் கிடைக்கவில்லை.*]

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம்: குருதேவர் அவர்களின் கையெழுத்தில் இருந்த கட்டுரையின் ஒளி நகல் (Xerox Copy).//**

**<u>9/7/94 ஞாயிற்றுக்கிழமை அன்று 12.00 மணி அளவில் ஊழியர் கூட்டம் மற்றும் குருதேவரின் சொற்பொழிவு கிண்டியில் நடைபெற்றது. அவற்றின் குறிப்புகள்:-</u>**

கிண்டி,
17-7-1994.

# <u>இ.மு.க.வின் செயல்நிலைகள்</u>

## <u>குருதேவர் கூறியது:</u>

*[1 முதல் 19 பத்திகள் மாணுக்கர்களுக்கு அப்போதைய சூழலில் செயல்பட வேண்டிய விதங்களை வழங்கிய அறிவுரைகள். வேண்டும் என்பவர்கள் கேட்டு வாங்கிக் கொள்ளலாம்.]*

(20) நமது செயல்திட்டங்கள் அனைத்தும் இந்துமத நூல்களில் இருக்கின்றன.

(21) எக்காரணத்தை முன்னிட்டும் நம்முடைய இ.மு.க. இந்து<u>மத</u> முன்னேற்றக் கழகம் அல்ல, அல்ல, அல்ல. இது இந்து<u>வேத</u> முன்னேற்றக் கழகம் என்று சொல்ல வேண்டும்.

(22) இந்து வேதம் இந்த உலகில் இருக்கக் கூடிய எல்லா மொழியினர்க்கும், எல்லா இனத்தவர்க்கும், எல்லா நாட்டவர்க்கும், எல்லா மதத்தவர்க்கும் எழுதப்பட்டிருக்கிறது என்று கூறித்தான் ஆதிசிவனுர் இந்துவேதத்தை வழங்கிஞர்.

(23) இந்த இந்துவேதம் ஒன்றுதான் (1) குடும்ப ஆண்டவர்கள், (2) குலதெய்வங்கள், (3) கிராமத்து தேவர் தேவதைகள், (4) நாட்டுக் கடவுள்கள் என்று நான்கு வகைப்பட்ட அருளுலகத்தவரையும் வணங்கவும், பூசை செய்யவும்; அழுகை, தொழுகை, எள்ளல், ஏசல் செய்யவும் வழிமுறைகள் சொல்கிறது.

(24) இந்துவேத முன்னேற்றக் கழகம் ஏன் செயல்பட வேண்டும் என்றால் (1) மதப் போர், (2) மதப் போட்டிகள், (3) மதப் பொறாமைகள், (4) மதச் சண்டைகள், (5) மதச் சச்சரவுகள், (6) மத மாற்ற சிக்கல்கள், பிறச்சினைகள், (7) சாதிப் பிரிவினைகள், (8) சாதி வேற்றுமைகள், (9) சாதி ஏற்றத்தாழ்வுகள் முதலியவற்றை முழுமையாக வேருடன் களைந்து எடுத்து எறிவதற்கு, பறித்து அகற்றுவதற்கு எழுத்துப்பூர்வமாக, அருளுலகச் சட்டப்பூர்வமாக வழிவகை செய்கிறது.

(25) இந்துவேதம் ஒன்றுதான் அனாதிக் காலம் என்கின்ற 4,85,920 ஆண்டுகளில் ஆயிரக்கணக்கான அனாதி சிவன்கள் மனுநீதியார்கள் என்ற பெயரில் பதினெண்சித்தர் பீடாதிபதிகளாக இம்மண்ணுலகிற்கு வந்து மண்ணின் ஈசர்களான மணீசர்களை ஆராய்ந்து அவர்களுக்கு இடையில் உடல் மேல் தோல் நிறத்தில் (வண்ணத்தில்) 48 வகையான மனிதர்கள் இருந்தார்கள்; உடம்பில் உள்ள உறுப்புக்கள், அங்கங்கள் முதலியவற்றின் உயரம், பருமன், அகலம், வடிவமைப்பு முதலியவைகளில் 800 வகை வேறுபாடுகள் இருந்தன; மேலும் இதேபோல 800 வகையான வெவ்வேறு மொழிகள் இருந்தன; இதேபோல மக்கள் சேர்ந்து வாழ்ந்த இடங்கள் நாடுகள் என்ற பெயரில் 800 நாடுகள் இருந்தன என்று தெளிவாகக் குறித்து; இந்த வேறுபாடுகளால் மணீசர்கள் இடையில் ஒற்றுமைகள் இல்லை என்று தெளிவாகக் குறிக்கின்றார்கள். இவற்றிற்கு எல்லாம் மேலாக ஒவ்வொரு மொழியினரும் தங்கள் தங்கள் மொழியினரில் தோன்றிய அருளாளர்கள் பெயரால் பல மதங்களை வைத்துக் கொண்டனர். அதாவது, குறிப்பிட்ட மக்கள் தொகையினர் ஒரே மொழியினராக இருந்தாலும்; வழிபடும் கடவுள் பெயரால் ஒரே மொழியினர்க்குள் ஒற்றுமையில்லை.

(26) நாட்டு அடிப்படையில் ஒற்றுமை இல்லை. உடம்பில் மேல் தோல் நிறத்தில் ஒற்றுமை இல்லை. உருவ அமைப்பால் இனத்தவருக்குள் ஒற்றுமை இல்லை. முக்கியமானது மொழிகளின் பெயரால் ஒற்றுமை

இல்லை. அருளுலகத்தவர்கள், கடவுள், அருளாளர்கள் பெயராலும் ஒற்றுமை இல்லை. எனவேதான், அருளுலகத்தவர்கள் தமிழ்மொழியைத் தவிர மண்ணுலக மொழிகளில் எந்த மொழியையும் அருளுலகத்தவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனாலும் தமிழ்மொழியில் உள்ள பூசை மொழிகள், வாசகங்களைப் பயன்படுத்தி மற்ற மொழியினர் பூசை செய்தால் நூற்றுக்கு 50 பங்கு அதாவது அரைப் பங்கு பயன் கிடைக்கும். முழுமையான அருளுலகப் பயன் வேண்டும் என்றால் தமிழ்மொழியில்தான் மந்திரங்கள் சொல்ல வேண்டும்.

*இருக்கு வேதம் காண்டம்:1, மண்டலம்:1, நாள் உரைக்கோவை வாசக முன்னுரை, அறிவுரை.*

(27) தமிழ்மொழியில் பூசை செய்தால்தான் பயன் உண்டு. வேறு எந்த மொழியினரும் கடவுளைப் பார்க்க முடியாது. கடவுளைப் பார்த்ததாக வேறு மதத்தவர் எவரும் கூற முடியாது. எந்த மதத்தவரும் கடவுளைப் பார்த்ததாகச் சொல்லவில்லை. உலகிலுள்ள எல்லாக் கடவுளர்களுக்கும் அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியும், அருளூறு அமுதத் தெய்வீகச் செம்மொழியும் ஆன முத்தமிழ்ச் சொற்களால்தான் பூசைமொழி வாசகங்கள் இருக்கின்றன, இருக்க முடியும். அதாவது, இந்துவேதம்தான் கடவுளைப் பற்றிக் கூற முடியும்.

(28) எனவேதான், இ.மு.க. முதலில் தமிழ்நாட்டுப் பிறச்சினைகளைத் தீர்க்கும், அடுத்து தென்னிந்தியப் பிறச்சினைகளை தீர்க்கும், மூன்றாவதாக இந்தியப் பிறச்சினைகளைத் தீர்க்கும். இந்த வெற்றியைப் பொறுத்து உலகப் பிறச்சினைகளைத் தீர்க்கும். இதற்குரிய வழிமுறைகள் இந்து வேதத்தில் இருக்கின்றன. ஏனென்றால், இந்துவேதம் என்கின்ற ஆலமரத்தின் இலைகளாகவோ, கிளைகளாகவோ, விழுதுகளாகவோதான் இம்மண்ணுலகில் வேதங்கள் தோன்ற முடியும். இதை இந்துவேதத்தின் அடிப்படையில்தான் உறுதியாகக் கூற முடியும். இந்துவேதமே இம்மண்ணுலகில் முதல் அரசாங்கம் அமைத்தது. எனவேதான்

இ.மு.க. அரசியல் கட்சியாக வருகிறது. மற்ற எந்த அரசியல் கட்சிகளாலும் தமிழகப் பிறச்சினை, தென்னிந்திய பிறச்சினை, உலகப் பிறச்சினை ஆகியவற்றைத் தீர்த்து வைக்க முடியாது, தீர்த்து வைக்க முடியாது, தீர்த்து வைக்க முடியாது. கம்யூனிசக் கட்சியின் தொழிலாளி கொள்கை பொய். இந்துவேத கொள்கைதான் உண்மை.

(29) இந்துவேதத்தில் சொல்லப்படாதது ஏதும் இல்லை.

(30) நாங்கள் சொல்லுகிற இந்துவேதம் அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியான முத்தமிழ் மொழியில் இன்றைக்கு 38,87,175 ஆண்டுகளுக்கு முன்னால் அண்டபேரண்டங்களிலிருந்து வந்த பதினெண்சித்தர்களின் தலைவரான ஆதிசிவனாரால் நிறுவப்பட்டது. ஆனால், நாட்டு வழக்கில் எல்லா கோயில்களிலும் குருக்கள், அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், தீட்சிதர்கள், பூசாறி, வேதியர், கணபாடிகள் எனப்படுபவர்களால் சமசுக்கிருத மொழியில் சொல்லப்படுகின்ற வேதம் இன்றைக்கு 1994ஆம் ஆண்டிற்கு முன்னால் மூவாயிரம் ஆண்டுகள் எல்லையில் - அதாவது கலியுகம் துவங்கி 2000 ஆண்டுகள் கழித்து நாராயணர் என்பவரால் சமசுக்கிருத மொழியில் எழுதப்பட்ட ஹிந்து வேதம். இந்த ஹிந்து வேதம் ஏற்கனவே நாட்டு வழக்கில் இருந்த ஆதிசிவனார் தமிழில் வழங்கிய இந்துவேதத்திலுள்ள ஒருசில பகுதிகளை எடுத்துக் கொண்டு; வடஆரியர் எனப்படுபவர்களின் சனாதன தருமம், வேதம் என்று சொல்லப்படுபவைகளின் கருத்துக்களே அதிகமாகக் கொண்டதாக - அதாவது வர்ணாசிரம அடிப்படையில் எழுதப்பட்ட ஒன்றாகும். அதாவது இந்த சமசுக்கிருத ஹிந்துவேதத்தின் கருத்துக்களில் 99 சதவீத கருத்துக்கள் ஆதிசிவனார் தமிழில் வழங்கிய இந்துவேதத்தில் இல்லை, இல்லை, இல்லை.

(31) ஆதிசிவனாரின் இந்துவேதத்தில் இன்றைக்கு தமிழ்மொழியில் நடைமுறையில் உள்ள 247 எழுத்துக்களும், மறைக்கப்பட்ட 75

எழுத்துக்களும், பதினெண்சித்தர் பீட எழுத்து 1உம் சேர்த்து 323 எழுத்துக்கள் உள்ளன. இந்த எழுத்துக்களையும் 108 வகை திருப்பதி சக்கரங்களையும், 243 வகை சத்திபீடச் சக்கரங்களையும், 1008 வகைப்பட்ட சீவாலயச் சக்கரங்களையும் உடையதுதான் இந்துவேதம். சமசுக்கிருதத்தில் உள்ள ஹிந்து வேதத்தில் எழுத்தும் சக்கரமும் இல்லை. ஹிந்து வேதத்தில் இப்படிப்பட்ட மந்தரங்கள் இல்லை. தேவர்களை மகிழ்விக்க என்று தவம் செய்தல், யாகம் செய்தல் முதலியவற்றிற்கான வழிவகைகளை மட்டும் கூறுகிறது ஹிந்துவேதம். இந்து வேதத்தில் மனிதர்கள் இயற்கையாகவே தோன்றினார்கள் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், ஹிந்து வேதத்தில் மனிதத் தோற்றத்தினைப் பற்றி பகுத்தறிவுக்கு ஒவ்வாத கற்பனைகள் கூறப்பட்டிருக்கின்றன.

(32) இந்து வேதத்தில் ஆதிசிவனாரால் 27 வகைப்பட்ட காயந்திரிகள் கூறப்பட்டிருக்கின்றன. சமசுக்கிருத மொழியிலுள்ள ஹிந்து வேதத்தில் காயத்திரி மந்தரம் என்று ஒன்றேயொன்று கூறப்படுகின்றது. இதேபோன்று எண்ணற்ற வேறுபாடுகள் உண்டு. இது தெரிந்து கொண்டு இ.மு.க.வில் சேர்ந்து இந்துமதத்தைப் பாதுகாக்க வாருங்கள். ஏனென்றால், நடைமுறை நாட்டு வழக்கில் இருப்பது வடஆரியரின் சமசுக்கிருத மொழிக்குரிய ஹிந்து வேதத்தின் ஹிந்து மதம்தான். ஆனால், நாங்களோ தமிழரின் தமிழ்மொழியில் ஆதிசிவனார் கூறியுள்ள இந்து வேதத்திலுள்ள இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள். எனவே, இன்றைக்கு சீர்திருத்தவாதிகள், நாத்திகர்கள், கடவுள் மறுப்பாளர்கள், கடவுள் வெறுப்பாளர்கள், கடவுள் எதிர்ப்பாளர்கள் முதலியவர்கள் இதுவரை இந்த நாட்டில் விமரிசித்து வந்ததும், இன்றைக்கு விமரிசித்துக் கொண்டிருப்பதும் வடஆரியரின் சமசுகிருத மொழியிலுள்ள ஹிந்து வேதக் கருத்துக்களையும், ஹிந்து மதக் கருத்துக்களையுமே ஆகும்.

எனவே, அன்புகூர்ந்து எங்களை விமரிசிக்க விரும்புகிறவர்கள் எங்களது புத்தகங்களையும் அச்சிட்டு வழங்கியுள்ள அறிக்கை அறிவிக்கைகளையும் படித்துவிட்டும்; எங்களது குருதேவரது

ஒலிப்பேழைகளை கேட்டுவிட்டும் சன்னிதான உடையணிந்து (முழங்காலுக்கு மேல் சிவப்பு வேட்டி, கச்சை) இருக்கின்றவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். அங்குள்ள இ.ம.இ. அலுவலகங்களிலும் கேட்டுத் தெரிந்து கொள்க. அப்படியும் உங்களுக்கு சந்தேகம் தீர வில்லையெனில் (15 பைசா) அஞ்சலட்டையில் இந்து வேதாகம குருகுலம், பதினெண்சித்தர் மடம் என்று காரணேரை முகவரிக்கோ; அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார், அம்பத்தூர் என்ற முகவரிக்கோ எழுதுங்கள்.

(33) எனவே, எனவே, எனவே தமிழ்மொழியில் ஆதிசிவனார் அருளியுள்ள இந்து வேதக் கருத்துக்களுக்கும், செய்திகளுக்கும், வரலாறுகளுக்கும்; சமசுகிருத மொழியில் நாராயணர் எழுதியுள்ள ஹிந்து வேதக் கருத்துக்களுக்கும், செய்திகளுக்கும், வரலாறுகளுக்கும் வேறுபாடு தெரிந்து கொள்ளாமல் கலங்கி, குழம்பி, தவறான, எதிரான பிரச்சாரம் செய்யாதீர்கள்.

நீங்கள் எங்களை சந்திக்க வருவதென்றாலும், உங்களைச் சந்திக்க எங்களை அழைத்தாலும் சரி, நாங்கள் வந்து விளக்கம் சொல்லத் தயாராக இருக்கின்றோம் என்று கூறும் ஒரே ஒரு இயக்கம்தான் இ.மு.க. அதாவது, அதாவது, அதாவது இன்றைக்கு உலகிலேயே, இந்தியாவிலேயே, தமிழ்நாட்டிலேயே நீ எந்தக் கேள்வி வேண்டுமானாலும் கேள், நான் பதில் சொல்லுகின்றேன் என்ற துணிவும், தெளிவும், பணிவும், பொறுப்பும், பொறுமையும் உள்ளவர்கள் இ.மு.க.வினர்தான். இ.மு.க.வின் இந்த 5 பண்புகளில் ஒரு பண்பு கூட இந்த உலகிலுள்ள எந்த ஒரு இயக்கத்திற்கும் கிடையாது. இ.மு.க.வை பொறுத்தவரை மொழி, இனம், பண்பாடு, நாகரிகம், கலை, கலாச்சாரம் முதலியவைகளுடைய தனித்தன்மைகள் காப்பாற்றப்பட வேண்டும். எந்த ஒன்றும் மற்றொன்றை அடக்கி ஆளவோ, சிதைத்துச் சீரழிப்பதையோ, விழுங்கவோ இ.மு.க. ஏற்றுக் கொள்ளாது.

(34) இந்து வேதத்தில்;

1. தனிமனித வாழ்வியல் நெறிமுறைகள் அதற்கு தேவையான சட்டதிட்டக் கட்டுப்பாடுகள்,

2. குடும்ப வாழ்வியல் நெறிமுறைகள், அவற்றிற்கு சட்டதிட்டக் கட்டுப்பாடுகள்,

3. சமுதாய வாழ்வியல் நெறிமுறைகள், அவற்றிற்கு சட்டதிட்டக் கட்டுப்பாடுகள்,

4. அரசியல் வாழ்வியல் நெறிமுறைகள், அவற்றிற்கு சட்டதிட்டக் கட்டுப்பாடுகள்

என்று மிகத் தெளிவாக நான்கும் வகுக்கப்பட்டுள்ளன. அதேநேரத்தில் ஒவ்வொரு சமுதாயமும் தன்னுடைய விடுதலை உரிமையும், பெருமையும், தனித்தன்மையும் கெடாமல் அரசியலுக்கு கட்டுப்பட்டிருக்கும். இதுதான் இந்து வேதத்தின் சிறப்பு.

அதாவது, குடும்ப வாழ்விற்காக தனிமனிதன் தியாகம் செய்யத் தேவையில்லை. சமுதாய வாழ்விற்காக எந்த ஒரு குடும்பமும் தன்னை இழக்கத் தேவையில்லை. அரசியல் வாழ்விற்காக குடும்ப வாழ்வு தடைப் படத் தேவையில்லை. போர்க்கால போர்க்கோல நிலை ஏற்பட்டால் தனிமனிதர்கள் தங்களைத் தியாகம் செய்தல் வேண்டும். இதேபோல் போர்க்கால போர்க்கோலத்தில் ஒருசில குடும்பங்களே கூட அழிவதும், தியாகம் செய்வதும் கூடும். அப்போதுதான் சமுதாயம் நிலைக்க முடியும். இதுதான் இந்துவேதம் கூறும் அரசியல் பாரம்பரியம் கூறும் சித்தாந்தம். இதுவே இ.மு.க.வின் சித்தாந்தங்கள்.

(35) இன்றைக்குள்ள வேலையில்லாத் திண்டாட்டம் இ.மு.க. ஆட்சிக்கு வந்தால் உறுதியாக ஐந்தாண்டுகள் ஆட்சியில் தமிழகத்துக்குள் 100க்கு 50 பங்கு அகற்றப்பட்டுவிடும். ஏனென்றால், இந்தியா பல மாநிலங்கள் சேர்ந்த ஒரு நாடு. பல மாநிலங்களுள் தமிழ்நாடு ஒரு மாநிலம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதாவது தமிழகத்தில்

இ.மு.க. அரசாங்கம் வேலைவாய்ப்பு தருவது என்று சொன்னால் பிற மாநிலத்தவர்கள் படையெடுத்து வந்துவிடுவார்கள். அப்பொழுது தமிழனுக்குத்தான் வேலை என்று சொன்னால், இந்துவேதத்தைப் பாதிக்கும். எனவே, இ.மு.க. கொடி செங்கோட்டையில் பறக்க வேண்டும். ஒரே ஆண்டுக்குள் வேலையில்லாத் திண்டாட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட முடியும்.

(36) இ.மு.க. ஆட்சி வந்தால் பிச்சைக்காரர்கள் இருக்க மாட்டார்கள். இ.மு.க.வினால்தான் மாணவர்களில் எத்தனை பேர் விரும்பினாலும் இன்சினீயருக்குப் படிக்கலாம், டாக்டருக்குப் படிக்கலாம் என்றும்; இதற்குரிய செயல்திட்டம் இ.மு.க.விடம் இருக்கிறது. ஆண்டுக்குரிய தேர்வு மாணவர்களுக்கு இருக்காது. இ.மு.க.வின் கல்விக் கொள்கை கூலிகளை உருவாக்காது, போலிகளை உருவாக்காது, காலிகளை உருவாக்காது, பிறருக்கு பயப்படக் கூடாது. அதாவது, தான் கற்ற கல்வியைப் பயன்படுத்தி வாழ்வு பெறுவதற்குரிய தன்னம்பிக்கையையும், வேலைவாய்ப்பையும், வசதியையும் ஏற்படுத்திடும்.

(37) இ.மு.க. பெரும்பாலும் கூட்டுறவு முறையில் இயங்கக் கூடிய தொழில்களாகவே அனைத்தையும் உருவாக்கும். இதுபற்றி இந்தியாவில் புரட்சி ஏன்? எப்போது? எப்படி? என்ற நூலின் மூன்று தொகுதிகளிலும்; புரட்சிக்குப் பின் என்ற நூலின் 4 பகுதிகளிலும் தெரிந்து கொள்க.

(38) இ.மு.க.வின் கல்வித் திட்டம் இந்நாட்டின் எல்லாக் குழந்தைகளுக்கும் சமமாகக் கிட்ட வேண்டும். இன்றைக்கு நம் நாட்டில் மதியச் சாப்பாடு சாப்பிட்டு இலவசமாக படிக்கும் குழந்தைகளும்; 5ரூ, 10ரூ, 100ரூ, 200ரூ, 1000ரூ, 2000ரூ கட்டிப் படிக்கும் கல்விகளும்; அதே கல்வி 10,000, 20,000 ரூபாய் கட்டிப் படிக்கும் கல்வியும் உள்ளன. இந்நாட்டில் கல்விக்கு பல்வேறு விலை வைக்கப்பட்டுள்ளன. இதனால்தான் நாட்டில் கொலை, கொள்ளை,

இலஞ்ச ஊழல் இருக்கிறது. பள்ளிக்கூடத்தில் படிக்கும் போதே இளம் பிஞ்சு நெஞ்சில் தன்னுடைய கல்விக்காக செலவழிக்கும் பணத்தை எப்படியாவது சம்பாதித்து விட வேண்டுமென்ற வெறியேற்படுகிறது. எனவேதான், பணம் சம்பாதிப்பதற்குரிய கல்வியை எல்லோரும் படிக்க விரும்பும் நிலை இருக்கின்றது.

(39) இன்றைக்கு நாட்டிலிருக்கக் கூடிய அரசியல் கட்சிகள் எல்லாமே ஏதாவது ஒரு மாநிலத்தில் ஆண்டு கொண்டிருக்கிறது; அல்லது ஆண்டார்கள் என்ற வரலாறுதான் இருக்கிறது. எனவே, அவை ஆண்ட மாநிலத்தில் ஆண்ட காலத்தில் என்ன சாதித்தார்கள்? என்ன சாதித்துக் கொண்டிருக்கிறார்கள்? நாங்கள் இன்னும் ஆளாதவர்கள். ஆனால், இந்த நாட்டை ஆளுகிறவர்களையும், ஆண்டு கொண்டிருப்பவர்களையும் எங்களால்தான் விமரிசிக்க முடியும்.

உதாரணமாக; (1) சாதிப் பிறச்சினைகள், (2) மதப் பிறச்சினைகள், (3) தொழிலாளர் கூலிப் பிறச்சினைகள், (4) மாணவர்களின் கல்விப் பிறச்சினைகள், (5) வேலையில்லாத் திண்டாட்டம், (6) இந்தியாவின் ஆட்சிமொழி, (7) மாணவர்களின் பயிற்று மொழி, (8) திடீர் திடீரென விலைவாசி ஏற்றம், (9) கைத்தறி நெசவு வீழ்ச்சி, (10) பாரம்பரியப் பண்பாட்டு வீழ்ச்சி, (11) புதிய புதிய நோய்களின் தோற்றம், வளர்ச்சி, (12) தண்ணீர் பிறச்சினைகள், (13) இந்தியாவை ஒரு அரசு ஆள வேண்டும். எல்லா ஆறுகளையும் மத்திய அரசு ஆள வேண்டும் என்ற சட்டம் வரவில்லை. (14) Be / Buy Indian என்பதைச் செயல்படுத்த முடியவில்லை, (15) இந்தியாவின் பண்பாட்டு மதமே அரசாங்க மதம் என்று சொல்ல ஏன் பயப்படுகிறாய்?

(40) இந்த நாட்டில் இருக்கக் கூடிய எல்லா அரசியல் கட்சிகளும், இந்திய அளவில் உள்ள அரசியல் கட்சிகளும், வெள்ளைக்காரனுடைய காங்கிரசு கட்சிகளும் - அதாவது அந்நியன் நம்மை அடிமைப்படுத்தி கூறுபோடுவதற்கு துணை போகக்கூடிய (அ) உதவக் கூடிய கட்சியாக

உருவாக்கிய கட்சிதான் காங்கிரஸ் கட்சி. அது மிதவாத காங்கிரசு, தீவிர வாத காங்கிரசு என்று பிரிந்தது. காந்தியுடைய காங்கிரசுக் கட்சியிலிருந்து காமராஜ் காங்கிரசு, இந்திரா காங்கிரசு பிரிந்தன. நீதிக் கட்சியிலிருந்து தி.க. பிரிந்தது. தி.க.விலிருந்து தி.மு.க. பிரிந்தது. தி.மு.க.விலிருந்து அ.தி.மு.க. பிரிந்தது. எம்.ஜி.ஆர் அ.தி.மு.க., மக்கள் தி.மு.க.. என்று பல கட்சிகள் தோன்றிவிட்டன. ஆனல், இ.மு.க. ஒன்றுதான் எந்தவிதக் கட்சியின் தொடர்பும் இன்றி நேரடியாகத் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இதிலிருந்து பிரிவுகள் பிரிய காரணங்கள் ஏதுமில்லை.

(41) எனவே, இ.மு.க. ஒன்றுதான் இந்நாட்டின் தமிழ்ப் பண்பாடான இந்துப் பண்பாட்டின் அடிப்படையில் செயல்பட்டு வருகிறது, செயல்பட முன்வந்துள்ளது. தமிழ்ப் பண்பாடுதான் இந்துவேத மதப் பண்பாடு. ஏனெனில், தமிழ்மொழிதான் இந்துவேத மொழி, மத மொழி. ஏனெனில் தமிழர்கள்தான் அருளுலகின் நாற்றுகள், இந்துவேத வித்துக்கள், இந்துவேத நாற்றங்கால்கள், இந்துவேத விதைப் பண்ணைகள், இந்துவேத நாற்றுப்பண்ணைகள், தமிழர்கள்தான் அருளுலக மூலவர்கள், காவலர்கள், தமிழர்கள்தான் நாயகர்கள், தமிழர்கள்தான் தலைவர்கள், தமிழர்கள்தான் ஆச்சாரியார்கள். .....

<u>குறிப்புக்களை சேகரித்தது:</u>

சித்தர் நான்மறையுடையார்,

சித்தர்மகள் லோ. இளையராணி தேவி.

**//உண்மை நகல்//**

**//மூலம்: கையெழுத்துப் பிரதியாகக் கிடைத்தது. இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள சித்தர் நான்மறையுடையார் அவர்களின் கையெழுத்தாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.//**

ஓம்

# குருதேவர் வழங்கிய செயல்திட்டம்

***3-11-96 மாலை சுந்தரராமனும் சண்முகானந்தனும் குருதேவர் அவர்களைச் சந்தித்த போது குருதேவர் அருளிய செயல்திட்ட விளக்கங்கள்.***

1) பூசையை அறிந்தவன் பூசாறி. கோயில்களில் பூசை செய்பவர்கள்தான் பூசாறிகள் என்று கருதக் கூடாது. அல்லது பூசாறி பரம்பரையில் வந்தவர்கள்தான் பூசாறிகள் என்றும் கருதக் கூடாது. உலகெங்கிலும் அன்றாடமோ அல்லது வசதிப்படும் போதெல்லாமோ பூசை செய்பவர்கள் அனைவரும் பூசாறிகள்தான். எனவே, நம் பூசாறிகளுக்கு பூசை செய்யும் முறைகளைக் கற்றுத் தந்து தயாரிக்க வேண்டும். அதனாலேயே பூசாறிகள் மாநாடுகளை அறிவித்து நடத்திட வேண்டிய அவசியம் தற்போது உள்ளது.

2) எந்த ஒரு காரணத்திற்காகவும் மந்தரித்து முடிகயிறு, தாயத்து, சக்கரங்கள் கொடுக்க வேண்டுமென்றாலும் சுடுகாட்டுச் சாம்பல் தேவை. அது இல்லாமல் மந்திரிக்க முடியாது. இந்து மதத்தவரைத் தவிர மற்ற மதத்தவர்கள் இறந்தவரைப் புதைக்கும் பழக்கம் உள்ளவர்கள். எனவே, அவர்களின் புதைகாடுகளில் சாம்பல் கிடைக்காது. இசுலாமிய மந்திறவாதியோ, கிறித்தவ மதத்தில் உள்ள மந்தரிப்பவனோ மந்தரிக்க வேண்டுமென்றால், இந்து மதச் சுடுகாடுகளுக்கு வந்து சுடலைச் சாம்பலைக் கொண்டு சென்றுதான் மந்திரிக்க வேண்டும்.

இல்லையென்றால் அவர்களுடைய செயல்கள் எவ்விதப் பயனையும் தராது.

இப்படி மாற்று மதத்தைச் சேர்ந்தவர்கள் நமது சுடலைகளைப் பயன்படுத்தித்தான் அவர்கள் மதத்தவர்களுக்கும்; நமது மதத்தவர்கள் சென்றால் நம்மர்களுக்கும் மந்தரித்துப் பயன் நல்குகிறார்கள். இதனால், மாற்று மதத்தவர்கள்தான் வலிமை பெறுகிறார்கள். இதனை நாம் தடுத்தேயாக வேண்டும்.

3) நமது சுடலைக் காப்பாளர்களுக்கும், இந்து மதத்தவர்களுக்கும் இது பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்திட வேண்டும். நமது சுடலைகளைச் சுற்றி வேலியோ அல்லது சுவர் அரணோ எழுப்புவதற்கு வழிவகைகள் செய்திட வேண்டும். எல்லாச் சுடலைகளிலும் திரிசூலம் ஊன்றிட ஏற்பாடு செய்து பொதுமக்கள் வழிபாடு நடத்திடும் பழக்கத்தினைப் பயிராக்க வேண்டும். திரிசூலத்தின் கீழ் சக்கரம் வைத்தால் 60 சதவீதம் வரை சுடலை முழுக்கப் பாதுகாக்கப் பட்டுவிடும். மாற்று மதத்தவர் சுடலைச் சாம்பலை எடுத்துச் சென்றாலும் பயன் இல்லாமல் போய்விடும். நம்மவர்களுக்கு மட்டும் முழுப் பயன் தரும் நிலை வந்திடும்.

4) இம்மாபெரும் பணியை நாம் தனியாகச் செய்யப் புகுந்தால் ஹிந்து மதத்தவர் நம்மைப் பற்றி அவதூறு கூறி சுடுகாட்டுப் பேய் பிசாசுகளை வைத்து மந்திறம் செய்யும் கூட்டம் என்று இழிவு படுத்திப் பேசிப் பொதுமக்கள் நம்மிடம் வரவொட்டாமல் செய்து விடுவார்கள். நம்மால் வளர முடியாமல் போய்விடும். இதற்கு மாற்றாக நாம் பூசாறிகளைப் பயன்படுத்தி இதைச் செய்ய வேண்டும். அதிலும், பூசாறிகளைச் சுடுகாட்டிற்குச் சென்று பூசை செய்யக் கூறினால் அதனையே சாக்காக வைத்து நம்மைப் பற்றித் தரக் குறைவாகப் பேசிப் பூசாறிகளை நம்மிடம் சேர விடாமல் செய்து விடும் சூழ்நிலை வந்திடும்.

அதனால், நாம் பூசாறிகளைப் பயிற்சிகள் கொடுத்துத் தயார் செய்யும்போது சுடலை பற்றிய உண்மைகளைக் கூறிப் புரியவைத்து அவர்களைப் பொதுமக்களிடம் இதைப்பற்றிப் பேச வைக்க வேண்டும். பூசாறிகள் கோயில்களில் பூசை செய்கையில் சந்திக்கும் பொதுமக்களிடம் சுடலைக்கும் சென்று அமாவாசை முழுநிலவு நாட்களில் வழிபாடு செய்யுமாறு அறிவுரைகள் கூற வேண்டும். சுடலைக்குச் சென்று அமாவாசை முழுநிலவு நாட்களில் வழிபட்டு வந்தால் முன்னோர்கள் சாந்தி பெறுவார்கள் என்றும், அதன்மூலம் அவர்கள் குடும்பத்தில் நிறைவும் நிம்மதியும் கிட்டும் என்றும், பூசாறிகள் அறிவுறுத்த வேண்டும். அமாவாசை அன்று பகலில் 1½ மணிக்கு முன்பும், முழுநிலவு நாளில் பிற்பகல் 3 மணிக்கு மேல் இரவில் எந்நேரமும் சென்று சுடலையில் விளக்கேற்றி வைத்து ஏதாவது படையல் படைத்து வழிபட்டு வந்தால் போதுமானது.

இந்த விழிப்புணர்வு பூசாறிகள் மூலம் மக்களுக்கு ஏற்பட்டு சுடலைப் பூசைகள் செய்து வந்தால் சுடலைகள் வலிமைப்படும். தனிமனித குடும்ப வாழ்வில் நிறைவு கிடைக்கும். நம்மவர்கள் வலிமைப்பட்டு விடுவார்கள்.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல் சித்தரடியான் சுந்தரராமனின் கையெழுத்தில் இருந்திட்டது.//**

ஓம் குருவே எல்லாம்

அனைத்தும் குருவருளே! திருவருளே!

திருமடம்.

19/11/96.

## <u>பதினெண்சித்தர் மடம்</u>

# <u>தெய்வீக மருத்துவ மையம்</u>

1) அன்பு மகன் சித்தர் முத்தீசர் வெ.செகதீசன், **<u>அருட்பணி விரிவாக்கத் திட்ட மாதண்டநாயகம்</u>** அவர்களுக்கு,

தலைவர், குருதேவர், ஞானத்தந்தை விடுத்துக் கொள்ளும் செயல்விளக்கத் திருவோலை.

2) யாவும் நலமாகட்டும், வெற்றியாகட்டும். அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்களின் அருட்செயல்களே. அம்மையப்பர்களின் திருவருளே.

3) அன்பு மகனே, இன்றைய நிலையில் 'அ.வி.தி.'யின் மாதண்ட நாயகமாகிய நீ; கட்டாயமாக நமது இயக்கம், கழகம், செயல்திட்டம் (அ.வி.தி.) முதலியவற்றை விழிச்சியும், எழிச்சியும் உடையதாக ஆக்கிட வேண்டும். அதற்குத் தேவையான முயற்சிகளை எடுத்திட வேண்டும் நீ.

4) அன்பு மகனே, உரிய பயிற்சிகள் இருந்தால்தான், நாம் எடுக்கக் கூடிய முயற்சிகள் மிகப்பெரிய வெற்றியினைப் பெறும். எனவே, இங்கு அறிவிக்கப்படப் போகிற செயல்திட்டங்களை விரிந்தும், விரைந்தும் செயலாக்கும் பணியினைத் துவக்குதல் வேண்டும். உனக்கு உற்ற துணையாக சித்தர் உருத்திரத் தேவர், சித்தர் கொங்கணர், இயக்கப் பெரியவர், சித்தர் எண்வகையார், மாரிக்கனி, தமிழ்

மைந்தன், மாரியப்பன், மாரிமுத்து, காமராசு, தினகரன், ... முதலியவர்கள் அனைவரும் இருக்கிறார்கள். இருப்பார்கள்.

5) இதனை மனதினில் கொண்டு மிகுந்த துணிச்சலுடன் (தைரியத்துடன்) மிகத் தெளிவான முடிவுகளை எடுத்துச் செயல்பட்டேயாக வேண்டும். இது **அருளாணையாக, அருளாணை பெற்ற குருவாணை ஓலை நாயகத்தால் வழங்கப் படுகின்றது.**

6) அன்பு மகனே, நீ தமிழகம் முழுதும் மின்னல் வேகச் சுற்றுப்பயணங்கள் செய்திடல் அவசியம். இச் சுற்றுப்பயணங்கள் மூலம் நமது தாய்நாடு முழுதும் ஆங்காங்கு தெய்வீக மருத்துவ மையங்களை தோற்றுவிக்க வேண்டும்.

7) அன்பு மகனே, இத் தெய்வீக மருத்துவ மையங்களின் மூலம் பொதுமக்களுக்கு ஆவி, ஆன்மா, ஆருயிர் பெறக் கூடிய அனைத்து விதமான பாதிப்புக்களுக்கும் மருந்தாக அருளை அநுபவப் பொருளாக வழங்கிடல் வேண்டும்.

8) அன்பு மகனே, நமது இந்துமதக் கோயில்கள் எல்லாம் இந்து வேதப்படி முறையான பூசைகளையும், திருநாள்களையும், திருவிழாக்களையும் கொண்டாடாததால்தான் கோயில்கள் பெரும்பாலும் பாழடைந்து நலிந்து பொலிவிழந்து காணப்படுகின்றன.

9) அன்பு மகனே, நாடெங்கும் உள்ள எல்லா (இந்துக்) கோயில்களிலும், பாதிப்புள்ள மக்களுக்கு மந்திரித்து, அருள் நலம் வழங்குகின்ற செயல்திட்டம் மீண்டும் உன் மூலம்தான் செயலுக்கு கொண்டு வரப்படல் வேண்டும். இதற்காக, நமது சன்னிதானங்கள் எல்லாம் அவரவர் வட்டாரத்தில் உள்ள எல்லாக் கோயில்களிலும் மந்திரிக்கும் செயல்திட்டத்தை அமுலாக்க வேண்டும்.

10) இதற்காக நமது சன்னிதானங்கள் ஒவ்வொரு நாளுக்கும் ஒவ்வொரு கோயிலென்று மந்திரிக்க வேண்டும். ஊரில் அதிகக் கோயில்கள் இல்லையென்றால் சுற்று வட்டாரங்களில் உள்ள ஏனைய

ஊர்களுக்குச் சென்று மந்திரிக்க வேண்டும். இதன் மூலம் தான் நாம் அருளாட்சியைக் கொண்டு வர முடியும். **இதற்காக உனக்கு முழு அதிகாரம் வழங்கப் படுகிறது**.

11) அன்பு மகனே, இந்த அஞ்சலினை அனைவருக்கும் படித்துக் காட்டி அனைவரையும் செயல்படச் செய்ய வேண்டும். உன்னுடைய செயல்கள் மூலம்தான் நம்மவர்கள் சுறுசுறுப்பாக செயல்படச் செய்ய முடியும்.

12) அன்பு மகனே, உன் மூலம் தெய்வீக மருத்துவ மையம் பதினெண்சித்தர் மடம்; ஊர் ஊராக தோற்றுவிக்கப்பட வேண்டும். முதல் கட்டமாக அருளாட்சித் திருநகரில் தெய்வீக மருத்துவ மையத்தினை துவக்கிடு. இதற்காக அனைவருக்கும் அழைப்புக் கொடுத்து ஒரு திருவிழா போல் இந்த தெய்வீக மருத்துவ மையத்தின் துவக்க விழாவை கொண்டாட வேண்டும். மற்றவை தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்

திருவாணை ஓலை நாயகம்:

ஞாலகுரு சித்தர்
கோசலையாற்றங்கரைக் கருவூரர்.

**அன்பு - சித்தர்**
**அந்தணர் அண்ணல்,**
**ஞானாச்சாரியார்,**
19-11-1996.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: குருதேவர் அவர்களின் மூத்த திருமகனார் கோசலையாற்றங்கரைக் கருவூரர் அவர்களின் கையெழுத்தில் இருந்தது. இதன் இறுதியில் குருதேவர் அவர்களின் கையொப்பம் இருந்தது.//**

# குருதேவரின் சிந்தனைத் துளிகளில் சில!

1. அகிம்சையைப் போதித்த இயேசுவின் மதத்தவர்தான் துப்பாக்கி முனையில் இந்தியாவை ஆண்டனர். கத்தி, வேல், .... உள்ள கடவுளையுடைய மதத்தவர்தான் அடிமைகளானுர்கள்.

2. தான் படைத்தது உயர்ந்தது, முழுமையானது என்ற நிறைவு ஏற்பட்டுவிட்டால் பிறகு வளர்ச்சியே இருக்காது.

3. இயேசு முழுநேரத் தொண்டர்களை உருவாக்கியது; தன்னைக் காத்துக் கொள்ளக் கூடிய அளவுக்குக் கூட ஒரு சீடனையும் உருவாக்கவில்லை.

4. தலைவனுக்கு புதியன கூறிக் கொண்டே இருத்தலோ! புதுமை செய்து கொண்டே இருத்தலோ தேவையில்லை. ஆனுல், மக்களின் மனநிலையைப் பக்குவப்படுத்திக் கொண்டே போக வேண்டும்.

5. சிந்தனையாளன் தன் தலைமுறையிலேயே எதுவும் நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்க மாட்டான். ரூசோவின் எலும்புக்கடித்துக் கொண்டன ஏழு நாடுகள்.

6. தமிழ்நாட்டு மக்களுணர்ச்சி சந்தைக் கடையுணர்ச்சியே. மதம், சாதி, இனம், மொழி, ... முதலிய பல்வேறு உணர்ச்சிகள். ......

7. இயேசு மாயைகள் செய்து மயங்கிய தொண்டர்கள்; அவர் குற்றவாளியாக்கப்பட்டுச் சிலுவையில் ஏற்றப்படும் நிலை வளர வளர அவரிடமிருந்த மாயை புரியும் ஆற்றலின் மேல் நம்பிக்கை

குறைந்ததாலேயே அவர்கள் தங்கள் உயிரைக் கொடுத்தாவது இயேசுவைக் காக்க வேண்டும் என்ற நிலைக்கு வரவில்லை.

8. சித்து விளையாடுவதன்மூலம் சேர்த்து வைத்திட்ட ஆற்றல்களை அளவு மீறி வீணுகச் செலவழித்தவர்களாகி விடுகின்றுர்கள். அதனுலேயே தங்களின் இறுதியைத் தாங்கள் விரும்பிய நிலைக்குரியதாக்கிக் கொள்ளாமல் உலகம் தன் விருப்பப்படி வழங்குகின்ற நிலைக்குரியதாக்கிக் கொண்டிடுகின்றனர். அதாவது, சித்துக்கள் விளையாடியதில் ஆற்றல் முற்றிலும் அழிந்து விட்டதாலோ! அல்லது சித்துக்கள் விளையாடுவதில் அலுப்பு ஏற்பட்டு விட்டதாலோ! தங்களின் முடிவுக் காலத்தில் இழிவோ! அழிவோ! தங்களை நாடி வந்தால் அதை ஓடிச் சென்று வரவேற்று அதன் ஆளுகைக்குத் தங்களை உரியவர்களாக்கிக் கொண்டு விடுகின்றுர்கள். இதுதான் வியப்பையும், வினவலையும், விளங்காமையையும் .... விளைவிக்கின்றது. புத்தர், இயேசு, நபி, கன்பியூசியசு, சொராசிட்டர், நாயன்மார்கள், ஆழ்வார்கள், குருநானக், இராமகிருட்டிணர்; இராமலிங்கர் இவர் ஓர் எல்லை.

9. சித்தர்கள் மற்ற எல்லை. அதாவது, தங்களுடைய ஆற்றல்களைப் பற்றிச் சொற்களில் கூட ஓரளவாவது விளக்கியுரைத்தவர்களில்லை. தங்களுடைய ஆற்றலை மூடி மறைத்து வைத்து விட்டே சென்றிட்டவர்கள். அவர்கள் சொல்லிய சொற்களும் பல பொருளுணர்த்தி; மறைபொருளொன்று தொக்கி நிற்கும்படியானவையே.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலம்: குருதேவர் அவர்களின் கையெழுத்திலேயே எழுதப்பட்டதின் நகல்.//**



11வது பதினெண்சித்தர் பீடாதிபதி



மெய்ஞ்ஞானக்கொடி



12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.

... நாங்கள், கிராமம் கிராமமாகச் சென்று;
"கிராமத்து மக்களே! உங்கள் கிராமம் செழிப்படைய,
நல்வாழ்வு பெற்றிட; உங்களுக்குள் ஒற்றுமையும்,
சமாதானமும், மகிழ்ச்சியும், நோய்நொடியில்லா
நல்வாழ்வும் பெற்றிட; பயிர்களும் உயிர்களும் பிழைத்துத்
தழைத்திட; ஊர்ப் பொதுவிடங்களிலும், கோயில்களிலும்
சீவலிங்கக் கொடியாகிய மெய்ஞ்ஞானக் கொடியை ஏற்றி;
திரிசூலம் எனப்படும் மூவிலைச் சூலத்தை நட்டு,
அதையொற்றி விளக்கு மாடம் கட்டி மாலையில்
விளக்கேற்றி வழிபாடு செய்யுங்கள்" -என்ற இந்து வேத
அறிவிப்பை விளக்கவே வந்துள்ளோம். ...

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://gurudevar.in
https://induism.org
https://books.gurudevar.org
https://gurudevar.org
Email: indhuism@gmail.com

காணிக்கை : ரூ 15/-